**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | |
|---|---|
| Case No. | : CC No.305/2025 |
| Deposition of witness for Prosecution | : PW-1 |
| Name | : மாரிமுத்து, வயது 54 |
| Father Name/Husband Name | : கருப்பசாமி |
| Village | : கழுகுமலை |
| Taluk | : கழுகுமலை |
| Calling | : சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of September 2025.

**(Accused present).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது கழுகுமலை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 14.01.2025 ஆம் தேதி காலை 08.30 மணியளவில் கழுகுமலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் துரைசாமி அவருடன் நான் மற்றும் கழுகுமலை காவல் நிலைய காவலர் 1767 திரு. சுந்தரமகாலிங்கம் ஆகியோர்களுடன் ரோந்து செய்யும்போது கழுகுமலை ஓடைதெரு ஓடையில் வெள்ளைநிற பிளாஸ்டிக் பையுடன் நின்று கொண்டிருந்த ஆஜர் எதிரி இனம் தெரியாத மற்றொரு நபருக்கு கையில் வைத்திருந்த பிராந்தி பாட்டிலை எடுத்து கொடுத்து பணம் வாங்கி கொண்டிருந்தார். போலீசார் பார்டியாகிய எங்களை கண்டதும் பிராந்தி பாட்டிலை பெற்ற நபர் ஓடி தலைமறைவாகிவிட்டார். ஓட முயற்சித்த ஆஜர் எதிரியை பிடித்து விசாரித்தபோது தான் தென்காசி மாவட்டம், களப்பாகுளம், வடக்குத்தெரு, முருகன் மகன் பால்ராஜ் வயது 31 என்று கூறினார்.

2 அவர் கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் பையை சோதனைசெய்தபோது அந்த பையில் 180ML அளவு கொண்ட Mcdowells பிராந்தி பாட்டில்கள் 6 எண்ணம், 180 ML அளவு கொண்ட vorion பிராந்தி பாட்டில்கள் 4 எண்ணம், 180ML அளவு கொண்ட topstar பிராந்தி பாட்டில்கள் 2 எண்ணம், 180ML அளவு கொண்ட

kadamark பிராந்தி பாட்டில்கள் 3 எண்ணம் மற்றும் பணம் ரூ.200 இருந்தது. பிளாஸ்டிக் பை மற்றும் பணம் பற்றி விசாரித்தபோது அரசு அனுமதியின்றி இலாப நோக்கத்துடன் பிராந்தி பாட்டில்கள் அதிக விலைக்கு இனம் தெரியாத நபரிடம் விற்று வருவதாக கூறினார். எதிரியிடம் காரணம் கூறி கைதுசெய்து அவர் வைத்திருந்த மேற்படி பிராந்தி பாட்டில்கள் மற்றும் பணம் ரூ.200 யையும் அத்தாட்சி மூலம் உதவி ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றி அந்த அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் கையொப்பம் செய்ய முன்வரததால் போலீசார் பார்டியாக நாங்களே கையொப்பம் செய்தோம். அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. நான் காலையில் ரோந்து பணிக்கு காவல் நிலையத்தில் இருந்து செல்லும்போது சுமார் 07.00 முதல் 07.30 மணி இருக்கும். நான் முதலில் மார்க்கெட் பகுதிக்கு 30 நிமிடங்கள் ரோந்து சென்றேன். அதன் பின்பு கழுகுமலை பகுதியை சுற்றி காலை சுமார் 08.15 மணிவரை ரோந்து சென்றேன். பொதுவாக ரோந்து பணி என்பது சிறப்பு உதவி ஆய்வாளர் அல்லது உதவி ஆய்வாளர் தலைமையில் உடன் இரண்டு காவலர்கள் செல்வார்கள் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் எந்த பகுதிக்கு ரோந்து சென்றார் என்றால் கழுகுமலை பகுதிக்குதான் ரோந்து வந்தார். கழுகுமலை ஓடைதெருவில் குடியிருப்பு மற்றும் வணிகவளாகங்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த குடியிருப்பு பகுதி என்பதால் ஆள்நடமாட்டம் நிறைய இருக்கும் என்றால் குறைவாகதான் இருக்கும், நான்கு, ஐந்து நபர்கள் இருந்திருப்பார்கள்.

4. கழுகுமலை ஓடைத்தெருவில் உள்ள ஓடை என்பது கிட்டதட்ட 150 முதல் 200 மீட்டர் வரை நீளம் இருக்கும். நான் ரோந்து சென்ற சம்பவ இடமான ஓடைதெருவில் தட்டச்சு செய்வதற்கான கணினி வசதி கிடையாது என்றால் சரிதான். அத்தாட்சி காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது, உதவி ஆய்வாளர் கொண்டுவந்த படிவத்தில் நான் கையொப்பம் செய்தேன். உதவி ஆய்வாளர் படிவத்தை சம்பவ இடத்தில் வைத்துதான் நிரப்பினார். அந்த படிவமானது காவல் நிலையத்திற்கு அத்தாட்சி தயார் செய்வதற்காக கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்தில் இல்லை என்பதால்தான் சம்பவம் சம்பந்தமான விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. அரசு நிர்ணயித்த விலையைவிட அதிக விலைக்கு மது விற்கபட்டதாக நேரிலோ அல்லது ரகசிய தகவல் எங்களுக்கு வரவில்லை என்றால் ரகசிய தகவல் கிடைத்தது.

5. உதவி ஆய்வாளர் விசாரணையின்போது ரகசிய தகவல் கிடைத்த விவரத்தை சொன்னீர்களா என்றால் சொல்லவில்லை. குடியிருப்பு பகுதியில் சோதனையின்போது தனிநபர்கள் இருந்ததாக சொல்லும்பட்சத்தில் அவர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தோம் ஆனால் யாரும்

சாட்சியாக இருக்க முன்வரவில்லை. மேற்படி தனிநபர்களை விசாரிக்க அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி பிராந்தி பாட்டில்கள் எந்த அரசு மதுபான கடையிலோ அல்லது கடையின் விற்பனையாளர் கொடுத்தோ விசாரிக்கபட்டதா என்றால் விசாரிக்கபட்டது ஆனால் அதன் விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படுவதற்கு எதிரிக்கு ரசீது கொடுக்கபட்டதா என்றால் புலன் விசாரணை அதிகாரிக்குதான் தெரியும். நான் சம்பவ இடத்தில் உண்மையில் இருந்திருந்தால் அது தொடர்பான விவரங்கள் எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும், நான் சம்பவ இடத்தில் இல்லை என்பதால்தான் மேற்படி விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எளிதில் கிடைக்கக்கூடிய பொருட்கள் என்றால் சரியல்ல.

6. வழக்கு சொத்துக்கள் காவல் நிலையத்தில் ஏற்கனவே இருப்பு வைக்கபட்டது என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் விசாரணையின்போது எத்தனை மதுபாட்டில்களை எதிரி வாங்கி, விற்றார் என்று சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லவில்லை. எதிரி எந்த காலத்திலும் மதுபாட்டில்களை விற்பனை செய்யவில்லை என்றாலும், இந்த வழக்கானது உதவி ஆய்வாளரின் தூண்டுதலின்பேரில் புள்ளிவிவரத்திற்காக தொடரப்பட்டது என்றால் சரியல்ல. இனம் தெரியாத நபரை பிடிக்க முயற்சி செய்தீர்களா என்றால் முயற்சி செய்தபோது அவர் ஓடிவிட்டார். இனம் தெரியாத நபரிடம் மதுபாட்டில்களை எதிரி விற்று கொண்டிருந்ததாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அத்தாட்சியானது காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்த வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ரோந்து பணிக்கு சென்றதாக எனது பாக்கெட் டைரி போன்ற ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாக்கெட் டைரி போன்ற ஆவணங்களை தாக்கல் செய்தால் நான் ரோந்துக்கு செல்லவில்லை என்ற விவரம் தெரியவரும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.